**TNVR020029502025**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.

**முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B (Hons)., L.L.M.,**

நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.

2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30-ஆம் நாள் திங்கள்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.799/2025**

| | | |
|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | | அரசுக்காக:–<br>காவல் சார்பு ஆய்வாளர்,<br>மல்லி காவல் நிலையம்,<br>குற்ற எண்.130/2024 |
| குற்றம்சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் | | பாலமுருகன் (30/25),<br>த/பெ.சுப்பிரமணி,<br>தெற்கு தெரு,<br>ரெங்கபாளையம். |
| சம்பவம் நடந்த நாள் | | 18.10.2024 |
| புகார் கொடுக்கப்பட்ட நாள் | | 18.10.2024 |
| எதிரி கைதான நாள்<br><br>எதிரி பிணையில் சென்ற நாள் | | 18.10.2024 அன்றே காவல் நிலைய பிணையில் சென்றுள்ளார். |
| அரசு தரப்பு விசாரணை முடிவுற்ற நாள்<br><br>எதிரி தரப்பு விசாரணை முடிவுற்ற நாள் | –<br><br>– | 17.03.2026<br><br>இல்லை |
| எதிரி மீது குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | – | 12.02.2026 |
| குற்றம் | | |
| 1. சாட்டப்பட்டது | – | எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024–ன் கீழ் |

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

| | | |
|---|---|---|
| 2. வனையப்பட்டது | – | எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024–ன் கீழ் |
| காலதாமதத்திற்கான காரணம் | – | சாட்சி விசாரணைக்காக தாமதம் |
| அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை பற்றிய விவரங்கள் | – | அ.சா.1 13.03.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br>அ.சா.2 13.03.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br>அ.சா.3 17.03.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை |
| எதிரியிடம் BNSS பிரிவு 351(1(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | – | 24.03.2026 |
| எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச. பிரிவு 311 பிரிவின் படியான மனுக்கள் | – | இல்லை. |
| அரசு தரப்பு வழக்கறிஞர் | – | திருமதி.P.பெத்துரதி, M.B,.A., B.L., |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | – | திரு.R.முருகன், B.A., B.L,, |
| எதிரியின் கூற்று | – | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள். |

SUBASHINI T

Digitally signed by SUBASHINI T

| | | |
|---|---|---|
| நீதிமன்றத்தின் முடிவு | – | முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரி மீது 4(1)(C) TNP Amendment Act 2024–ன் கீழான, குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை BNSS பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>மேலும் இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இவ்வழக்கானது 19.07.2025ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 24.03.2026-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 திருமதி.P.பெத்துரதி, M.B,.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்களான திரு.R.முருகன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்தும், ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குப் பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.........

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கு கடந்த 18.10.2024ம் தேதி 09.00 மணிக்கு மல்லி காவல்நிலைய சார்பு ஆய்வாளர், காவலர்களுடன் மல்லி சரகத்தில், ரோந்து செய்து வரும் போது பூவநாதபுரம் விலக்கு அருகேயுள்ள ESSAR Bulk பின்புறம் வைத்து எதிரி எந்தவிதமான அரசு அனுமதியும் இன்றி சுயலபாம் கருதி 1) சுமார் 180 மிலி அளவு கொண்ட Old Chef Brandy பாட்டில்கள் 24, 2) சுமார் 180 மிலி அளவு கொண்ட One Man Army XXX Rum பாட்டில்கள் –10, 3) சுமார் 180 மிலி அளவு கொண்ட Old Chef Strong XXX Rum பாட்டில்கள் –1 ஆகியவற்றை எந்தவிதமான அரசு அனுமதியும் உரிமமோ, இன்றி சுயலாபம் கருதி விற்பனை செய்வதற்காக வைத்திருந்த

குற்றத்திற்காக எதிரி மீது 4(1)(C) TNP Amendment Act 2024–ன் கீழ் தண்டிக்கத்தக்கவர் என்று மல்லி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் BNSS பிரிவு 230ன் படி இலவசமாக வழங்கப்பட்டு, குற்றம் குறித்து வினவியபோது பொய் வழக்கு, குற்றவாளி இல்லை என்றார். போதிய கால அவகாசத்திற்கு பிறகு எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவியபோது எதிரி பொய் வழக்கு, தான் குற்றவாளி இல்லை என மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3) அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.3 சாட்சிகள் விசாரணை செய்து, அ.சாஆ.1 மற்றும் அ.சாஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–

4-(1) அ.சா.1 திரு.பாலசுப்பிரமணியன் தனது சாட்சியத்தில், தான் தற்போது மல்லி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 18.10.2024 அன்று தானும் தலைமை காவலர் எட்வின்ராஜா மற்றும் சார்பு ஆய்வாளர் ரகுபதி ஆகியோர் தங்கள் காவல்நிலைய எல்லைக்குட்பட் பகுதியில் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து செய்து வந்தபோது பூவநாதபுரம் விலக்கு அருகில் ESSAR Bulk பின்புறத்தில் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த ரெங்கபாளையம் தெற்கு தெரு சுப்பிரமணி மகன் பாலமுருகன் என்பவர் போலீஸ் பார்ட்டிகளாகிய தங்களை பார்த்தவுடன் ஓட முயற்சி செய்தவரை தடுத்து நிறுத்தி அவர் கையில் வைத்திருந்த உப்பு சாக்கை பார்த்தபோது அதில் 180 எம்எல் அளவுகொண்ட Oldchef Brandy 24 பாட்டில்களும், One man army XXX Rum 10 பாட்டில்களும், Old chef strong rum பாட்டில் ஒன்றும்அரசு மதுபானக்கடையிலிருந்து வாங்கி அதிக லாபத்திற்கு விற்பனை செய்வதற்காக

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

வைத்திருந்தார் என்றும், எதிரி தானாக மேற்படி மதுபான பாட்டில்களை தங்களிடம் கொடுத்தார் என்றும், எதிரி மற்றும் சொத்தை கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்து அத்தாட்சியில் கையெழுத்து செய்ய சம்பவயிடம் அருகேயிருந்த நபர்கள் யாரும் முன்வராததால் போலீஸ் பார்ட்டிகளாகிய தானும் தலைமை காவலர் எட்வின்ராஜாவும் சாட்சிகளாக கையெழுத்து செய்ததாகவும், பின்னர் எதிரி மற்றும் சொத்துக்களை நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்ததாகவும். தன்னிடம் காட்டப்படும் அத்தாட்சியிலுள்ள முதல் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அத்தாட்சி அசாஆ.1 என்றும், சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4-(2) அ.சா.2 திரு.எட்வின்ராஜா தனது சாட்சியத்தில் தான் தற்போது மல்லி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 18.10.2024 அன்று சார்பு ஆய்வாளர் ரகுபதி, தலைமை காவலர் 1530 பாலசுப்பிரமணியன் மற்றும் தானும் மதுவிலக்கு சம்மந்தமாக தங்கள் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் ரோந்து செய்துவந்தபோது பூவநாதபுரம் விலக்கு அருகில் ESSAR Bulk பின்புறம் ரோந்து செய்தபோது பின்னார் விசாரித்து தெரிந்து கொண்ட ரெங்கபாளையம் தெற்கு தெரு சுப்பிரமணி மகன் பாலமுருகன் என்பவர் ஒரு சாக்கு பையில் பாட்டில்களுடன் நின்று கொண்டிருந்தார் என்றும், சார்பு ஆய்வாளர் அவரை விசாரித்தபோது சட்டத்திற்கு புறம்பாக மதுபான பாட்டில்கள் வைத்திருந்ததால் மதுபான பாட்டில்களையும் எதிரியையும் காவல்நிலையம் அழைத்து வந்ததாகவும், மேற்படி மதுபான பாட்டில்கள் Old chef 24 Bottle, One man army 10 Bottle, Old chef strong 1 Bottle ம் காவல்நிலையம் எடுத்து வந்ததாகவும், அங்கு வைத்து அத்தாட்சி தயார் செய்து காவல்நிலையம் எடுத்து வந்ததாகவும், பின்னர் சார்பு ஆய்வாளர் எதிரி மீது வழக்கு பதிவு செய்தார் என்றும், சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்து அத்தாட்சியில் கையொப்பம் பெற்றார் என்றும், தன்னிடம் காட்டப்படும் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அத்தாட்சியிலுள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

4-(3) அ.சா.3 திரு.ரகுபதி தனது சாட்சியத்தில், தான் தற்போது மல்லி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணி புரிவதாகவும், கடந்த 18.10.2024ம் தேதி காலை 09.00 மணிக்கு தானும் தலைமை காவலர் 1530 பாலசுப்பிரமணியன் மற்றும் தலைமை காவலர் 2107 திரு.எட்வின்ராஜா ஆகியோர் மதுவிலக்கு ரோந்து சம்பந்தமாக காலை 09.00 மணிக்கு பூவநாதபுரம் விளக்கு அருகே உள்ள Essar Bulk பின்புறம் சென்ற போது ரெங்கபாளையம் தெற்கு தெரு சுப்பிரமணியன் மகன் பாலமுருகன் வயது 30, அரசு மதுபானக்கடையில் 1) சுமார் 180 மிலி அளவு கொண்ட Old chef brandy பாட்டில்கள்–24 2) சுமார் 180 எம்எல் அளவு கொண்ட One man army XXX Rum பாட்டில்கள்–10 3) சுமார் 180 எம்எல் அளவு கொண்ட Old chef stron xxx rum பாட்டில்–1 ஆகியவற்றை அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக வைத்திருந்தார் என்றும், தங்களை பார்த்தவுடன் தப்பி ஓட முயற்சித்தவரை பிடித்து விசாரித்த போது சட்ட விரோதமாக மதுபானங்களை விற்பனை செய்ய வைத்திருப்பதாக ஒப்புக்கொண்டார் என்றும், அதன் பின் மேற்படி வழக்கு சொத்துக்களை கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்து சம்பவ இடத்தில் அருகில் உள்ள நபர்கள் யாரும் அத்தாட்சியில் சாட்சியாக கையெழுத்து செய்ய ஒப்புக்கொள்ளாததால் போலீஸ் பார்ட்டிகாகிய தாங்களே அத்தாட்சியில் சாட்சிகளாக கையெழுத்து செய்ததாகவும், பின்னர் எதிரியை கைது செய்து மேற்படி வழக்கு சொத்துக்கள் மற்றும் எதிரியுடன் காவல் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.137/2024 பிரிவு 4(1)(C)TNP Act–ன் படி வழக்கு பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 என்றும், முதல் தகவல் அறிக்கை அசலை அத்தாட்சியுடன் இணைத்து சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 18.10.2024ம் தேதி சாட்சிகள் தலைமை காவலர் பாலசுப்பிரமணியன், தகா.எட்வின்ராஜா ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, இத்துடன் தனது விசாரணையை முடித்து எதிரி மீது 18.10.2024ம் தேதி பிரிவு 4(1)(C)TNP Act–ன் பிரகாரம் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும், மேற்படி வழக்கு சொத்துக்கள் கடந்த 30.11.2024 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கொட்டி அழிக்கப்பட்டது என்றும், மேற்படி வழக்கு

சொத்துக்களின் படிவம் 91 குற்ற இறுதி அறிக்கையுடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

5) இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டு, எதிரிக்கு எதிராக தோன்றிய அரசு தரப்பு சாட்சிய சங்கதிகளை தொகுத்து எதிரியிடம் BNSS பிரிவு 351(1)(ஆ)–ன் படி வினவியபோது எதிரி சாட்சியை பொய் எனக் கூறி மறுத்தார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என சொன்னார். இவ்வழக்கில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) <u>தீர்வுக்குரிய பிரச்சனை :–</u>

அரசு தரப்பால் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

7) இவ்வழக்கு கடந்த 18.10.2024 ம் தேதி 09.00 மணிக்கு மல்லி காவல்நிலைய சார்பு ஆய்வாளர், காவலர்களுடன் மல்லி சரகத்தில், ரோந்து செய்து வரும் போது பூவநாதபுரம் விலக்கு அருகேயுள்ள ESSAR Bulk பின்புறம் வைத்து எதிரி எந்தவிதமான அரசு அனுமதியும் இன்றி சுயலபாம் கருதி 1) சுமார் 180 மிலி அளவு கொண்ட Old Chef Brandy பாட்டில்கள் 24, 2) சுமார் 180 மிலி அளவு கொண்ட One Man Army XXX Rum பாட்டில்கள் –10, 3) சுமார் 180 மிலி அளவு கொண்ட Old Chef Strong XXX Rum பாட்டில்கள் –1 ஆகியவற்றை எந்தவிதமான அரசு அனுமதியும் உரிமமோ, இன்றி சுயலாபம் கருதி விற்பனைக்கு வைத்திருந்தார் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

8. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எனவே எதிரியை தண்டிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

9. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கின்

சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும் அதனால் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறும் வாதிடப்பட்டது.

10. அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 18.10.2024 அன்று தானும், தலைமைக் காவலர் எட்வின்ராஜா மற்றும் சார்பு ஆய்வாளர் ரகுபதி ஆகியோர் தங்கள் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில், மது விலக்கு சம்பந்தமாக ரோந்து சென்ற போது, பூவநாதபுரம் விலக்கு அருகில் ESSAR பல்க் பின்புறத்தில், சுப்பிரமணி மகன் பாலமுருகன் என்பவர் போலீஸ் பார்ட்டிகளை கண்டவுடன் ஓட முயற்சி செய்தவர்களை தடுத்தி நிறுத்தி அவர் கையில் வைத்திருந்த உப்பு சாக்கை பார்த்த போது அதில், 180 மிலி அளவு கொண்ட Old Chef Brandy 24 பாட்டில்களும், One Man Army XXX ரம் 10 பாட்டில்களும், Old Chef Strong Rum 1 பாட்டிலும், மதுபானக்கடையிலிருந்து வாங்கி அதிக லாபத்திற்கு விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததாகவும், எதிரி தானாக மேற்படி மதுபானபாட்டில்களை தங்களிடம் கொடுத்ததாகவும், எதிரி மற்றும் சொத்தை கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்து, அத்தாட்சியில் சம்பவ இடத்தின் அருகே இருந்த நபர்கள் யாரும் சாட்சிகளாக கையெழுத்து செய்ய முன்வராததால் போலீஸ் பார்ட்டிகளாகிய தானும், தலைமைக் காவலர் எட்வின்ராஜா என்பவரும் கையெழுத்து செய்ததாகவும், பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களை நிலையம் கொண்டு வந்து சார்பு ஆய்வாளரருக்கு வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்ததாகவும், அத்தாட்சியில் உள்ள கைெழுத்து தன்னுடையது தான் என்றும் கூறியுள்ளார்.

11. மேலும் அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில், அத்தாட்சியை தான் தான் எழுதியதாகவும், அத்தாட்சியில் எதிரியிடமிருந்து சார்பு ஆய்வாளர் கையெழுத்து பெற்றதாகவும், எதிரி மதுபானம் விற்றதாக புகார் எதுவும் பெறப்படவில்லை என்றும், உண்மையில் எதிரி மதுபானம் விற்றிருந்தால் மேற்படி பெட்ரோல் பல்கில் இருந்தவர்களே புகார் கொடுத்திருப்பார்கள் என்றும், சம்பவ

இடத்தில் இருந்த இரண்டு நபர்களை விசாரித்து கையெழுத்து செய்ய வருமாறு கேட்டதாகவும், ஆனால் அவர்கள் முன்வரவில்லை என்றும், முதல் தகவல் அறிக்கை எத்தனை மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்ற விபரம் தனக்கு தெரியாது என்றும், அத்தாட்சியில் தான் கையெழுத்து மட்டும் தான் செய்ததாகவும், மற்ற விபரங்கள் தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்பது தனக்கு தெரியாது என்பதால், தான் அத்தாட்சியில் கையெழுத்து செய்ததாக கூறப்படும் தனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 18.10.2024 அன்று சார்பு ஆய்வாளர் ரகுபதி, அ.சா.1 மற்றும் தானும் மது விலக்கு சம்பந்தமாக தங்கள் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில், ரோந்து சென்ற போது, பூவநாதபுரம் விலக்கு அருகில் ESSAR பல்க் பின்புறம் ரோந்து செய்த போது சுப்பிரமணி மகன் பாலமுருகன் என்பவர் ஒரு சாக்கு பையில் பாட்டில்கள் வைத்திருந்ததாகவும், மேற்படி Old Chef Brandy 24 பாட்டில்களும், One Man Army 10 பாட்டில்களும், Old Chef Strong 1 பாட்டிலும், காவல் நிலையத்திற்கு எடுத்து வந்ததாகவும், அங்கு வைத்து அத்தாட்சி தயார் செய்ததாகவும், பின்னர் சார்பு ஆய்வாளர் எதிரி மீது வழக்கு பதிவு செய்ததாகவும் கூறியுள்ளார்.

13. மேலும் அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில், எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதா என்பது பற்றி சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும் என்றும், பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தை சார்பு ஆய்வாளர் தயார் செய்ததாகவும், சம்பவ இடமானது தங்கள் காவல் நிலையத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளதாகவும், சம்பவ இடத்தில் தாங்கள் ஒரு மணி நேரம் இருந்ததாகவும், எதிரியிடம் யாரும் மதுபானம் வாங்கியதாகவே அல்லது மதுபானம் விற்றதாகவே தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றும், எதிரியிடம் பணம் எதுவும் கைப்பற்றப்பட்டதா என்பது பற்றி சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும் என்றும், சார்பு

ஆய்வாளர் அத்தாட்சியை தாயர் செய்ததாகவும், அத்தாட்சியில் எதிரி கையெழுத்து செய்துள்ளாரா என்பது பற்றி தனக்கு தெரியாது என்றும், மேற்படி உப்புத்தாளை தாங்கள் கைப்பற்றியதாகவும், கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டதா என்பது பற்றி தனக்கு தெரியாது என்றும், மேற்படி பெட்ரோல் பல்கின் உரிமையாளர் எதிரி மீது சார்பு ஆய்வாளரிடம் புகார் கொடுத்தாரா என்பது பற்றி தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 18.10.2024 அன்று அ.சா.1 மற்றும் அ.சா.2 உடன் மதுவிலக்கு சம்பந்தமாக பூவநாதவிளக்கு அருகே Essar பல்க் பின்புறம் சென்ற போது ரெங்கபாளையம் தெற்கு தெருவை சேர்ந்த சுப்பிரமணி என்பவரின் மகன் பாலமுருகன் சுமார் 180 மிலி அளவு கொண்ட Old Chef Brandy 24 பாட்டில்களும், 180 மிலி அளவு கொண்ட One Man ArmyXXX Rum 10 பாட்டில்களும், சுமார் 180 மிலி அளவு கொண்ட Old Chef Strong XXX Rum 1 பாட்டிகள் ஆகியவற்றை அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததாகவும், தங்களை பார்த்தவுடன் தப்பி ஓட முயற்சித்தவரை பிடித்து விசாரித்த போது சட்ட விரோதமாக மதுபானங்களை விற்பனை செய்ய வைத்திருப்பதாக ஒப்புக்கொண்டதாகவும், அதன் பின் அத்தாட்சி தயார் செய்து சம்பவ இடத்தின் அருகே யாரும் இல்லாததால், அத்தாட்சியில் போலீஸ் பார்ட்டிகளாகிய தாங்களே சாட்சிகளாக கையெழுத்து செய்ததாகவும், பின்னர் எதிரியை கைது செய்து எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் கொண்டு வந்து எதிரி மீது குற்ற எண்.137/2024 பிரிவு 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து எதிரியை கைது செய்து தக்க பிணை மூலம் காவல்நிலைய பிணையில் விடுவித்ததாகவும், மேற்படி காவலர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் அதே தேதியில் எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

15. மேலும் அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில், இவ்வழக்கின் முதல்

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

தகவல் அறிக்கையாது 18.10.2024 அன்று பதிவு செய்யப்பட்டதாகவும், குற்ற இறுதி அறிக்கையும் அன்றே தயார் செய்யப்பட்டதாகவும், ஆனால் முதல் தகவல் அறிக்கையானது 19.07.2025 அன்று தான் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், பொதுவாக வழக்கு சொத்தை அழித்த பின்தான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும், பொதுவாக மதுபான பாட்டில்களை அழிப்பதற்கு தாங்கள் தான் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்புவதாகவும், ஆனால் சம்பவத்தன்று மேற்படி வேண்டுகோள் கடிதத்தை தான் அனுப்பவில்லை என்றும், இவ்வழக்கு சொத்துக்களை குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பே ஒப்படைக்கப்படவில்லை என்றும், குற்ற இறுதி அறிக்கையில் மேற்படி வழக்கு சொத்துக்களை அழித்தல் தொடர்பாக குறிப்பிடப்படவில்லை என்றும், இவ்வழக்கில் படிவம் 91 யை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், மேற்படி வழக்கு சொத்தை அழிப்பது சம்பந்தமாக தான் அனுப்பிய வேண்டுகோள் கடிதம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், அத்தாட்சியில் எதிரியிடம் கையெழுத்து பெறப்படவில்லை என்றும், எதிரியிடம் யாரும் மதுபானம் பெற்றதாகவோ, அல்லது அவர் யாருக்கும் மதுபானம் விற்றதாகவோ எந்தவித சாட்சியமும் இல்லை. எதிரியிடமிருந்து மதுவிற்ற பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும், எதிரி சட்டவிரோதமாக மேற்படி மதுபானங்களை வைத்திருந்தால், சம்பவ இடத்தின் உரிமையாளர் புகார் கொடுத்திருப்பார் என்றும், ஆனால் இவ்வழக்கில் அவ்வாறு புகார் கொடுக்கப்படவில்லை என்றும், பார்வை மகஜர் மற்றும் வரைபடம் போன்ற ஆவணங்களும், ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் எதிரியிடம் பெறப்படவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

16. மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்ததிலிருந்து, அ.சா.1 தனது சாட்சியத்தில், அத்தாட்சியை தான் எழுதியதாகவும் கூறியுள்ளார். ஆனால் அதற்கு முரணாக அ.சா.2 அத்தாட்சியை சார்பு ஆய்வாளர் எழுதியதாக கூறியுள்ளார். மேலும் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் எதிரி மதுபானம்

விற்றதாக புகார் எதுவும் பெறப்படவில்லை என்று கூறியுள்ளனர். மேலும் எதிரியிடமிருந்து பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்று புலன்விசாரணை அதிகாரியான அ.சா.3 ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் அ.சா.1 உண்மையில் எதிரி மதுபானம் விற்றிருந்தால் மேற்படி பெட்ரோல் பல்கில் இருந்தவர்களே புகார் கொடுத்திருப்பார்கள் என்றும், போலீசார் தன்னை விசாரித்து வாக்குமூலம் பெறப்படவில்லை என்றும், தான் அத்தாட்சியில் கையெழுத்து மட்டும் தான் செய்ததாகவும், மற்ற விபரங்கள் தனக்க தெரியாது என்றும் கூறியுள்ளார். எனவே அ.சா.1ன் சாட்சியத்திலிருந்து அவர் உண்மையில் சம்பவ இடத்தில் இருந்த கண்ணுற்ற சாட்சி தான என்பது குறித்த நியாயமான சந்தேகத்தை இந்நீதிமன்றத் திற்கு ஏற்படுத்துகிறது. அ.சா.2ம் அத்தாட்சியில் கையெழுத்து மட்டும் கேட்டதால் தான் கையெழுத்து செய்து கொடுத்ததாகவும், எதிரி வைத்திருந்ததாக கூறப்படும் உப்புத்தாளை கைப்பற்றியதாகவும் கூறியுள்ளார். ஆனால் மேற்படி உப்புத்தாள் இந்நீதிமன்றத்தில் வழக்கு சொத்தாக தாக்கல் செய்யப்படவில்லை. அதுமட்டுமின்றி அ.சா.2 தனது சாட்சியத்தில், அத்தாட்சியில் எதிரி கையெழுத்து செய்ததாரா, எதிரியிடம் சோதனை சம்மதக் கடிதம் கொடுக்கப்பட்டதா, இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டதா, சம்பவ இடத்தில், தனிநபர்கள் விசாரிக்கப் பட்டார்களா போன்ற விபரங்கள் சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும் என்றும், தனக்கு அதுபற்றி தெரியாது என்று கூறியுள்ள சங்கதிகளிலிருந்து உண்மையில், அ.சா.2ம் சம்பவ இடத்திற்கு சென்றாரா என்பது குறித்த நியாயமான சந்தேகத்தை இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுத்துகிறது. மேலும் அ.சா.3 இவ்வழக்கு சொத்துக்களை அழித்தல் தொடர்பாக குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட வில்லை என்றும், மேற்படி வழக்கு சொத்தை அழிப்பதற்கு முன்பே குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுவிட்டதாகவும், அத்தாட்சியிலும் எதிரியிடம் கையெழுத்து பெறப்படவில்லை என்றும், வழக்கு சொத்தை அழிப்பதற்கு முன் அதை அழிப்பது சம்பந்தமாக அனுப்பப்பட்ட வேண்டுகோள் கடிதத்தையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், இவ்வழக்கில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றும், எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம்

பெறப்படவில்லை என்றும், முதல் தகவல் அறிக்கையை 19.07.2025 அன்று தான் நீதிமன்றத்திற்கு அனுப்பியதாகவும் ஒப்புக்கொண்டுள்ளார்.

17. மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து இவ்வழக்கு சங்கதிகளின் உண்மை தன்மை பற்றியும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் சொத்துக்கள் குறித்தும் நியாமான சந்தேகத்தை இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுத்துகிறது. மேலும் இவ்வழக்கு சொத்தானது கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே அழிக்கப்பட்டுள்ளது என்பது ஆவணங்களை ஆராய்ந்ததிலிருந்து புலப்படுகிறது. மேலும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக அ.சா.2 ல் கூறப்பட்ட உப்புத்தாளும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி வழக்கு சொத்துகளை தாக்கல் செய்யாமல் படிவம் 91 மட்டும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

18. பொதுவாக குற்றவியல் வழக்குகளில் குற்றம் நடந்த இடத்தை விசாரணை அதிகாரி பார்வையிட்டு அங்குள்ள சூழ்நிலைகளையும் கைப்பற்றப்பட்ட பொருட்களையும் ஆவணப்படுத்துவது புலன் விசாரணை அதிகாரியின் அடிப்படை கடமையாகும். அதுமட்டுமின்றி பார்வை மகஜர் மற்றும் வரைபடம் ஆகியவை சம்பவயிடத்தை பற்றிய முக்கியமான பதிவாகும். மேலும் மற்ற சாட்சிகளின் சாட்சியங்களை உறுதிப்படுத்தவும் அவை முக்கியமான ஆவணங்களாக விளங்குகிறது. ஆனால் இவ்வழக்கில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்படாதது இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் குறித்த நியாயமான சந்தேகத்தை இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுத்துகிறது.

19. மேலும் இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. இவ்வழக்கின் சம்பவம் நடந்த 18.10.2024 அன்றே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு 24.10.2024 அன்று தான் நீதிமன்றத்திற்கு

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

கிடைக்கப்பெற்றுள்ளது. மேற்படி காலதாமதத்திற்கான தகுந்த விளக்கமும் சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் வெளிப்படவில்லை. ஆனால் மேற்படி முதல் தகவல் அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பே எதிரி மீது 18.10.2024 அன்றே குற்ற இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டு 19.07.2025 அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சாட்சிகள் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளதை கருத்திற்கொண்டும், புலன் விசாரணையிலுள்ள குறைபாடுகளை கருத்திற்கொண்டும், வழக்கின் முக்கிய ஆவணங்களான பார்வை மகஜர் மற்றும் வரைபடம் போன்றவற்றை தயார் செய்யப்படாததை கருத்திற்கொண்டும், இவ்வழக்கில் எதிரியிடமிருந்த கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் உப்புத்தாளையும் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படாததை கருத்தில் கொண்டும், இவ்வழக்கின் முக்கிய ஆவணமான அத்தாட்சியை யார் தயார் செய்தார் என்பது பற்றியும், அதில் கையெழுத்து செய்த நபர்கள் குறித்தும் மேற்படி சாட்சிகளே முன்னுப்பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளதை கருத்தில் கொண்டும், மேலே விவரிக்கப்பட்ட காரணங்களை கருத்திற்கொண்டும் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட வில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்வதே நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

20. முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரி மீது 4(1)(C) TNP Amendment Act 2024–ன் கீழான, குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை BNSS பிரிவு 271(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

21. மேலும் இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30-ஆம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

அ.சா.1 திரு.பாலசுப்பிரமணியன்

அ.சா.2 திரு.எட்வின்ராஜா

அ.சா.3 திரு.ரகுபதி

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

அ.சா.ஆ.1 அத்தாட்சி

அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை

**<u>அரசு தரப்பு சான்றுப் பொருள்</u>** – இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

| | |
|---|---|
| 1. | எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தப்படவில்லை. |
| 2. | வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 3. | நடுவர் தீர்ப்புரையின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிட்டுள்ளார். |
| 4. | இவ்வழக்கில் வழக்குச் சொத்து தாக்கல் செய்யப்படவில்லை. |
| 5. | வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார். |